செய்தி வெளியீடு எண் : 27 நாள் :21.03.2018

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், கொட்டகுடி காப்புவனப் பகுதியில் கடந்த 11.03.2018 அன்று ஏற்பட்ட காட்டுத்தீ நிகழ்வினால் உயிரிழப்புகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்நிகழ்வில் மேல் நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு இத் தீவிபத்து ஏற்பட்டதற்கான சூழ்நிலைகள் குறித்து விரிவாக விசாரணை செய்ய வேண்டி உள்ளதால், தமிழக அரசு அரசாணை எண் (டி) 58, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (FR.14) துறை , நாள்: 13.03.2018ன்படி திரு அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., முதன்மை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, சென்னை அவர்களை விசாரணை அலுவலராக நியமனம் செய்து ஆணையிட்டுள்ளது.

விசாரணை அலுவலரான திரு அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., முதன்மை செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, அவர்கள் 21.03.2018 மாலை தேனி மாவட்டத்திற்கு வருகை புரிந்து மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிலை அலுவலர்களுடன் இந்நிகழ்வு குறித்து முதல்கட்ட கலந்தாலோசனை செய்தார்கள்.

மேலும் விசாரணை அலுவலர் 22.03.2018 அன்று மேற்படி தீ விபத்து நடைபெற்ற கொட்டகுடி காப்பு வனப்பகுதியினையும் பார்வையிட உள்ளார்கள்.

அதன்பின் விசாரணை அலுவலர் வரும் 23.03.2018 அன்று காலை 10.00 மணியளவில் இச்சம்பவம் தொடர்பாக போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் விசாரணை நடத்த உள்ளார்கள். அது சமயம் இச்சம்பவம் குறித்து அறிந்தவர்கள் இவ்விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலம் அளிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக அறிவிக்கப்படுகிறது.

ஒம்/- XXXXX
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி.

/உ.ந.உ.ப/

21/3/18
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
தேனி.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.